# யு.ஜி.சி. நடவடிக்கை: சட்டப்பேரவையில் தனித்தீர்மானம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைச் சிறுமைப்படுத்தும் செயல்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களிடம் தான் கல்வி தொடர்பான அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், அனைத்து மக்களுக்குமான கல்வியை முழுமையாகக் கொடுக்க முடியும்.

நியமனப் பதவிகளில் ஒருசில ஆண்டுகள் இருந்துவிட்டுப் போய்விடு பவர்களுக்கு ஒரு மாநில மக்களின் அடிப்படை உணர்வைப் புரிந்துகொள்ள இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு கல்வித் துறையில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வது இல்லை.

**கெடுநோக்கத்துடன் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

வரம்பற்ற கட்டணம், இடஒதுக்கீடு இல்லாத தன்மை என வரம்பு மீறும் தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழக களுக்கு கடிவாளம் போடுவதற்கு சிறு துரும்பும் கிள்ளிப் போட மறுக்கும் ஒன்றிய அரசு; தனது நிதிநிலை அறிக்கை யில் உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்துக் கொண்டே வரும் ஒன்றிய அரசு; கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டில் I.I.T., I.I.M., Central university போன்ற ஒரேயொரு புதிய உயர்கல்வி நிறுவனத்தைக் கூட அமைக்காத ஒன்றிய அரசு; I.I.T. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டியலினத்தவர், பிற்படுத்தப்பட்டோரது சட்டப்படியான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய ஒன்றிய அரசு; மாநிலங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை தனது முழு கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சி செய்வது கெடுநோக்கம் கொண்டது; சுயநலமானது. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக மாணவர் நலனை மனதில் கொண்டோ, கல்வித்தரத்தை மேம்படுத்தவோ இந்த முயற்சி நடைபெறவில்லை.

ஒரு தன்னாட்சி பெற்ற தனியார் கல்லூரியே பாடத்திட்டம் வகுத்துப் பட்டமும் வழங்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தி விட்டு, நூற்றாண்டு பெருமை கொண்ட கல்லூரிகளை அபகரிக்க எத்தனிப்பது அதிகார எதேச்சதிகாரம். தலைசிறந்த கல்வி நிறுவனங்களை நாட்டிலேயே அதிக அளவில் கொண்டிருக்கும் தமிழ்நாடு, நமது கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி பறிக்கப்படு வதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்காது; அப்படி இருக்கவும் முடியாது.

**ஒன்றிய அரசு மாறாவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம்!**

கல்வியையும், மக்களையும் காக்க, எதிர்காலத் தலைமுறையைக் காக்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒட்டுமொத்த மாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாக வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு மனம் மாறாவிட்டால் மக்கள் மன்றத்தை யும் நீதிமன்றத்தையும் நாடு வோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முன்னுரையுடன் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

"பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பது தொடர்பாக சமீபத்தில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறை களைத் திரும்பப்பெற வேண்டுமென இப்பேரவை கருதுகிறது.

அதேபோல் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்தபட்ச வரைவு நெறிமுறைகள், 2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள், 2025 ஆகியன தேசிய கல்விக் கொள்கை, 2020-ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இத்தகைய நடவடிக்கைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடான கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் உயர் கல்வி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தாகவும் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வலுவான உயர் கல்விக் கட்டமைப்பை இந்த வரைவு நெறிமுறைகள் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும், தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதாலும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் இந்த இரண்டு வரைவு நெறிமுறை களையும், துணைவேந்தர் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வரைவு நெறிமுறைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசின் கல்வித் துறையை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."

மேற்கண்டவாறு தீர்மானத்தில் முதல்வர் தெரிவித்தார்.

முதல்வர் கொண்டுவந்த இத்தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**முதல்வர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு, இத்தீர்மானத்தை ஆதரித்தும் வரவேற்றும் பேசினர்.**

**பா.ஜ.க. சார்பில் பேசிய நைனார் நாகேந்திரன் உள்ளிட்ட பா.ஜ.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.**

**இவ்விவாதத்தின் இறுதியிலும் முதல்வர் அவர்கள் உரையாற்றி, "இந்தத் தனித் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்கள்.**

**முதல்வரின் உரை வருமாறு:-**

மாநில அரசின் உரிமைகளில் தொடர்ந்து தலையீடு செய்துகொண்டிருக்கிற, சமூக நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வலுவான தமிழகத்தின் உயர் கல்விக் கட்டமைப்பைப் பாதிக்கும் ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை கடுமையாக எதிர்த்து, அரசின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த அரசினர் தனித் தீர்மானத்திற்கு பேரவை உறுப்பினர்கள் மு.ஜெகன்மூர்த்தி, தி.வேல்முருகன், ஈ.ஆர்.ஈஸ்வரன், ப.அப்துல் சமது, டாக்டர் தி.சதன் திருமலைக்குமார், கே.மாரிமுத்து, மா.சின்னதுரை, ஜெ.முகம்மது ஷாநவாஸ், நயினார் நாகேந்திரன் பட்டும்படாமல் பேசிவிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டு, மீண்டும் வந்து உள்ளே உட்கார்ந்து மறுபடியும் போய் விட்டார். என்னவென்று தெரியவில்லை!

அதேபோல் ஜி.கே.மணி, செ.ராஜேஷ் குமார் அக்ரி, எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சி.வி.எம்.பி.எழிலரசன், மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை அழுத்தமாக, ஆணித்தரமாக அரசினர் தீர்மானத்திற்கு வலுச்சேர்க்கக்கூடிய வகையிலே இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், அரசு கொண்டுவந்தி ருக்கக்கூடிய இந்தத் தனித் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டு மென்று பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்) மறுப்போர் 'இல்லை' என்க. மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

> "கல்வியையும், மக்களையும் காக்க, எதிர்காலத் தலைமுறையைக் காக்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாக வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு மனம் மாறாவிட்டால் மக்கள் மன்றத்தையும் நீதிமன்றத்தையும் நாடுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முன்னுரையுடன் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்."

# தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் முதல்வர் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த மாநாடு தொழில்நுட்பம் தொடர்பா னது மட்டுமல்ல, இது தொலைநோக்குக் கொண்ட மாநாடு! தமிழ்நாட்டின் நீடித்த மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு வழிவகுக் கும் மாநாடு!

அனைத்துத்தரப்பு மக்களையும் உள்ளடக் கிய வளர்ச்சியை தொழில்நுட்பத்தின் உதவி யுடன் இன்னும் எப்படி மேம்படுத்தலாம் என்று வழிகாட்டுகின்ற மாநாடு! நம்முடைய தமிழ்நாடு தொழில்நுட்பம் என்பது புத்தாக்கம் மற்றும் தொழில்துறை வளர்ச்சியில் எப்போ தும் முன்னோடி மாநிலம்தான்! வணிகத்தை யும், தொழில்முனைவோரையும் ஊக்குவிப் பதில் மற்றவர்களை விட நாம் எப்போதும் ஒரு அடி Advanceஆக இன்றைக்கு நின்று கொண் டிருக்கிறோம்!

**தொழில்நுட்பங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவோம்!**

அந்த வகையில்தான், AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு, Block Chain, இணையக் கருவிகள் (IOT), மின் வாகன உற்பத்தி மற்றும் வளரும் தொழில்நுட்பங்க ளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற முன்னெ டுப்புகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அதற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக சொல் லவேண்டும் என்றால், நாம் ஆட்சிக்கு வந்த திலிருந்து, G.C.C. எண்ணிக்கை அதிகரித்து வருவதை சொல்லுவேன். ஆனால், என்ன தான் முன்னணியில் இருந்தாலும், 'இதுவே போதும்' என்று நான் நினைக்க மாட்டேன். இன்னும், கூடுதலான வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு செல்லவேண்டும் என்று தான் நினைப்பேன்!

அதை சரியாக புரிந்துகொண்டு நம்மு டைய பி.டி.ஆர். அவர்கள் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருக்கிறார். 1999ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையில் டைடல் பூங்காவை உருவாக் கினார். இன்றைக்கு நாம் அடுத்தகட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம்.

**சமச்சீரான வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறோம்!**

கோவை, சேலம், மதுரை, திருச்சி, ஓசூர், திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், தூத்துக் குடி என்று இரண்டாம் கட்ட, மூன்றாம்கட்ட நகரங்களில் கூட எல்காட் தொழில்நுட்பப் பூங் காக்களும், சிறு தொழில்நுட்பப் பூங்காக் களும் நிறுவப்பட்டிருக்கிறது. இதற்கு கார ணம் என்ன? "வளர்ச்சி தலைநகரத்தில் மட் டுமே குவியக் கூடாது. உண்மையான வளர்ச்சி என்றால் அது சமச்சீரானதாக, பரந் துபட்டதாக இருக்க வேண்டும்". இதனால் தான், சென்னை மட்டுமல்லாமல், மற்ற நகரங்களைச் சுற்றியிருக்கும் இளைஞர் களுக்கும் அவர்கள் பகுதிகளிலேயே வேலை வாய்ப்புகளுக்கான மாபெரும் உந்துசக்தியை நாம் உருவாக்கி வழங்கிக் கொண்டு வருகி றோம்.

இந்த வரிசையில், AIக்காக கோவையில் 'Public Private Partnership' முறையில் 2 மில் லியன் சதுர அடியில் 'தகவல் தொழில்நுட்ப வெளி'யை நிறுவப் போகிறோம்.

**தொழில்நுட்பக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்!**

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் பயனடையும் வகையில் நம்முடைய அரசு செயல்பட்டு வரு கிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்முனை வோர்களுக்கு வழிகாட்டி யாக இருக்கிறோம். இதற்கான தொழில்நுட் பக் கொள்கை ஒன்றை உருவாக்கப் போகி றோம் என்று ஏற்கனவே அறிவித்திருக்கி றோம். அதுவும் விரைவில் வெளியிடப்படும்.

ஐ.டி. துறை வளர மனித வளங்கள் மிக முக்கியம்! அதற்காக தான் என்னுடைய கன வுத்திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை உருவாக்கினேன். வேறு மாநிலத்திலிருந்து, இங்கு இருக்கும் பலரும் அதைப் பற்றி கேள் விப்பட்டிருக்கலாம்.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு Soft Skills, தொழில் சார்ந்த திறன்களை அளிப்பதில் அந்த திட்டம் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற மாநில இளைஞர்களோடு ஒப்பிடும் போது நான் முதல்வனால் நம்முடைய பிள் ளைகளுக்கு ஒரு பெரிய 'Levarage' கிடைத்தி ருக்கிறது.

**ஆசிரியர்கள் - மாணவர்களின் திறன்களை மேம்படுத்த நடவடிக்கை!**

அதேபோல், ICT பயிற்சி நிறுவனம் மூலம், கடந்த ஓராண்டில் 10 ஆயிரத்து 435 ஆசிரி யர்கள் மற்றும் 34 ஆயிரத்து 267 மாணவர் கள் தொழில் சார்ந்த திறன்களுக்கான பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

ஐ.டி.யிலேயே எந்தெந்த துறைகளில் Develop ஆகின்ற Scope அதிகமாக இருக்கி றது என்று கவனித்து, அந்தத் துறைகளில் நம்முடைய ஆசிரியர்கள் மற்றும் மாணவர் களின் திறன்களை மேம்படுத்த, பல்வேறு தொழில்பிரிவுகளுடன் 78 கோடி ரூபாயில், 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்திருக்கி றோம்.

இது ஒரு பக்கம் என்றால், தமிழ் மென் பொருள்கள் உருவாக்கவும் மிகுந்த முக்கியத் துவம் அளித்துக் கொண்டு வருகிறோம். தமிழ்க் கணிப்பொறிக்கான டிஜிட்டல் வடிவங் களைத் தரப்படுத்தும் யுனிகோட் கன்சார்ட்டி யத்தில் நிறுவன உறுப்பினர் நிலையில், தமிழ்நாடு அரசின் பிரதிநிதி யாக தமிழ் இணையக் கல்விக் கழகம் விளங்குகிறது.

Internetஇல் தமிழ் மொழி குறித்த பொருண்மைகளை மேம்படுத்த உதவ வேண்டும் என்று பிழைதிருத்தி, கிராமர் அன லைசர், உரை திருத்தி போன்ற நிறைய மென்பொருள்களை தமிழ் இணையக் கல் விக் கழகம் உருவாக்கியிருக்கிறது. தமிழ்ப் பொருண்மைகள் அடிப்படையில், AI தொடர் பான முயற்சிகளுக்கு NLP கருவிகளும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இதெல்லாம் செய்தால் மட்டும் போதுமா? இல்லை! அதனால்தான், Cyber Securityக்கும் முக்கியத்துவம் அளிக்கிறோம். இதற்காக, 2024ஆம் ஆண்டில் 'Cyber Security Policy 2.0'வை வெளியிட்டோம். MSMEகளுக்கான Cyber Security தொழில் நுட்ப உதவிப் பிரிவையும் ஏற்படுத்துவோம். அனைத்து மாவட்டங்களிலும், மின் ஆளுமையை மேம்படுத்தவும், பொதுமக் களுக்கு இ-சேவைகளை வழங்கவும் தகவல் தொழில்நுட்பம் திறம்படப் பயன்படுத்தப்படு கிறது.

**அரசின் அனைத்துச் சேவைகள் ஆன்லைனில் வழங்கப்பெற வேண்டும்!**

அரசின் அனைத்து சேவைகளும் Onlineல் வழங்கப்படவேண்டும். மக்களின் நேரமும், அலைச்சலும் மிச்சமாகவேண்டும். அந்த நோக்கத்தோடுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு இசேவை மையங்களின் அமைப்பு முறையை வலுப்படுத்தி யிருக்கிறது.

2021ஆம் ஆண்டில் 14,927ஆக இருந்த இசேவை மையங்கள் 2024ஆம் ஆண்டு முடிவில் 33,554 என்ற அளவுக்கு இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்திருக்கிறது.

இன்றைக்கு நாம் கலைஞர் மகளிர் உரி மைத்திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப் புதல் வன் போன்ற திட்டங்கள் தொடங்கி, மாதாமா தம் கோடிக்கணக்கான மக்களுக்கு நேரடி யாக வங்கிக் கணக்கில் பணத்தை செலுத்து கிறோம். அதற்கும் இந்த டேட்டாவும், தொழில் நுட்பமும்தான் காரணம்.

**இன்டர்நெட் அனைத்து இடங்களிலும் என்ற நிலை வந்துவிட்டது.**

அப்படிதான்,

- 1கோடியே 28 இலட்சம் பயனாளி களுக்கு இதுவரை மொத்தம் 13 ஆயி ரத்து 522 கோடி ரூபாய் வழங்கப்பட்டி ருக்கிறது. எது இல்லை என்றாலும் பரவாயில்லை, Internet அனைத்து இடங்களிலும் இருக்கவேண்டும் என் கிற நிலை உருவாகிவிட்டது.
- அதற்காக தான், சென்னையில் இருக்கும் கடற்கரைகள், பேருந்து முனையங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில் பொது மக்கள் இணைய வசதியை எளிதாக பயன்ப டுத்த 1,204 இலவச WiFi Points நிறுவி யிருக்கிறோம்.
- தமிழ்நாட்டில் இருக்கும் அனைத் துத் தகவல் தொழில்நுட்ப நிறு வனங் களுக்கும், ஒத்துழைப்பு மற்றும் உதவி களை வழங்க, 'சிறப்பு உதவி மையம்' ஒன்றை ELCOT நிறுவ இருக்கிறது.

**மிகவும் ஆர்வத்தோடு பணிகளை தொய்வின்றி தொடரும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்**

இப்போது நான் பட்டியலிட்ட இந்த அனைத்து பணிகளையும் ஆர்வத்துடன், ஒரு பெரும் கனவோடு முறைப்படுத்திச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார் நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறை யின் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள். இந்தப் பணிகள் எல்லாம் தொய் வில்லாமல் தொடரவேண்டும் என்றுதான் இந்த மாநாட்டை உரிய காலத்தில் அவர் ஏற் பாடு செய்திருக்கிறார்.

இது DIGITAL யுகம்! இனி, மக்களுடைய அனைத்து பயன்பாடுமே Digital வழியாக தான் இருக்கும். இந்தப் பயன்பாடு Simple ஆக அனைவரும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.

அதேநேரத்தில், முறைகேடுகள் செய்ய நினைப்பவர்களை தடுக்கும் அளவுக்கு பாது காப்பு அம்சங்களும் இருக்கவேண்டும். டிஜிட் டல் தொழில்நுட்பம் பரவும் அதே வேகத்தில், டிஜிட்டல் குற்றங்களும் பரவி வருகிறது. அவை தடுக்கப்படவேண்டும். அதற்கேற்ப, தொழில்நுட்பங்கள் வடிவமைக்கப்படவேண் டும், வலுப்படுத்தப்படவேண்டும்!

**எதிர்காலத்தை நோக்கி ஒளிமயமான டிஜிட்டல் களம்!**

ஐ.டி. மற்றும் புதுமைக்கான அடுத்த யுகத்தை நோக்கி, வளமான வாய்ப்புகளைக் கண்டறியவும், அறிவார்ந்த கருத்துக்களைப் பரிமாறிக்கவும், கூட்டாண்மை நிறு வனங் களை உருவாக்கவும் இந்த மாநாட்டை இங்கு வந்திருக்கும் வல்லுநர்கள் பயன்படுத் திக்கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம் புகிறேன். ஒளிமயமான டிஜிட்டல் களத்தில் எதிர்காலத்தை நோக்கி நாட்டையும், உலகை யும் வழி நடத்துவதற்கான நம்முடைய ஒருங் கிணைந்த தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாக Umagine 2025 திகழட்டும்!

புதுமை மற்றும் மேன்மையின் உலகளா விய மையமாக தமிழ்நாட்டை நாம் அனை வரும் சேர்ந்து உருவாக்குவோம். எந்தப் புதுமை வந்தாலும், அதை முதலில் முயன்று பார்க்கும் மாநிலமாக தமிழ்நாடு எப்போதும் இருந்திருக்கிறது. "முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்" இருப்பது நம்முடைய தமிழ் நாடு! அந்த வழியில் நம்முடைய அனைத்து செயல்பாடுகளும் இருக்கவேண்டும் என்று கூறி இந்த மாநாடு பெரும் வெற்றி பெற வாழ்த்தி, இதை இவ்வளவு சிறப்பாக ஒருங்கி ணைத்திருக்கும் நம்முடைய அமைச்சர் பி.டி. ஆர். அவர்களையும், அவருக்கு துணை நின்ற அரசு அலுவலர்களையும் மீண்டும் ஒருமுறை பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் உரையாற்றினார்.

> "தமிழ் மென்பொருள்கள் உருவாக்கவும் மிகுந்த முக்கியத்துவம் அளித்துக் கொண்டு வருகிறோம். தமிழ்க் கணிப்பொறிக்கான டிஜிட்டல் வடிவங்களைத் தரப்படுத்தும் யுனிகோட் கன்சார்ட்டியத்தில் நிறுவன உறுப்பினர் நிலையில், தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக தமிழ் இணையக் கல்விக் கழகம் விளங்குகிறது."

> "ஐ.டி. மற்றும் புதுமைக்கான அடுத்த யுகத்தை நோக்கி, வளமான வாய்ப்புகளைக் கண்டறியவும், அறிவார்ந்த கருத்துகளைப் பரிமாறிக்கவும், கூட்டாண்மை நிறுவனங்களை உருவாக்கவும் இந்த மாநாட்டை இங்கு வந்திருக்கும் வல்லுநர்கள் பயன்படுத்திக்கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒளிமயமான டிஜிட்டல் களத்தில் எதிர்காலத்தை நோக்கி நாட்டையும், உலகையும் வழி நடத்துவதற்கான நம்முடைய ஒருங்கிணைந்த தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாக Umagine 2025 திகழட்டும்!"